# Tamilnadu Petroproducts Limited

Regd.Office: Manali Express Highway, Manali, Chennai 600 068.
CIN: L23200TN1984PLC010931
Website: www.tnpetro.com E-mail: secy-legal@tnpetro.com
Telefax: 044-25945588

## Notice

**ANNUAL GENERAL MEETING AND NOTICE THEREOF**

Notice is hereby given that the Thirty Fourth Annual General Meeting (AGM) of the Company will be held on Monday, the 5th August 2019 at 03.00 PM at Rajah Annamalai Mandram, No. 5 Esplanade Road, (Opp. High Court), Chennai – 600 108 to transact the Ordinary and Special Business as set out in the Notice of the said meeting.

The Notice together with the Annual Report for the FY 2018-19 has been sent on 09.07.2019 in Electronic mode to Members whose e-mail Id's are registered with the Company or Depository Participant(s). Dispatch of physical copies of the Notice together with the Abridged Annual Report for FY 2018-19 has been completed on 12.07.2019 to all other Members to their registered address through the permitted mode.

The Notice of the AGM together with the Annual Report is also available in the Company's Website. Members who have not received the Notice and the Annual Report may download the same from the website or request for a copy of the same by writing to the Registrar and Share Transfer Agent (RTA), Cameo Corporate Services Limited, Subramanian Building, 1, Club House Road, Chennai – 600 002, Email: investor@cameoindia.com .

A Member entitled to attend the AGM and vote is entitled to appoint a proxy to attend and vote at the Meeting instead of himself / herself and the proxy need not be a Member of the Company. The proxy form should be deposited at the Registered Office of the Company not less than 48 hours before the commencement of the Meeting.

**BOOK CLOSURE**

Pursuant to Section 91 of the Companies Act 2013, notice is hereby given that the Register of Members and Share Transfer Books of the Company will remain closed from 01.08.2019 to 05.08.2019 (both the days inclusive).

**DECLARATION & PAYMENT OF DIVIDEND FOR THE YEAR 2018-19**

The dividend as recommended by the Board of Directors, if approved at the AGM will be paid on 30th August 2019 in respect of shares held in physical form to those Members whose names appear in the Register of Members on 5th August 2019 and in respect of shares held in electronic form to those Members whose names appear in the list of beneficial owners furnished by the Depositories as at the close of business hours on 31st July 2019.

**FACILITY FOR E-VOTING**

Pursuant to Section 108 of the companies Act, 2013, the relevant Rules and Regulation 44 of SEBI (Listing Obligations & Disclosure Requirements) Regulations, 2015 the Company has entered in to an agreement with Central Depository Services (India) Limited (CDSL) to facilitate the Members to exercise their right to vote at the AGM by electronic means. The Notice of the meting is also displayed in the websites of CDSL and the Stock Exchanges viz., www.cdslindia.com, www.bseindia.com and www.nseindia.com which may be referred to for further details. The detailed process for participating in the remote e-voting is available in the notice of the meeting. Members of the Company holding shares in either physical or dematerialized form as on **29th July 2019 being the Cut-Off Date** and whose names are entered as Members in the Register of Members or in the Register of Beneficial Owners by the Depositories on that date alone shall be entitled to exercise the voting rights either by remote e-voting or at the meeting.

Persons who have acquired shares and become Members of the Company after the dispatch of the notice and hold shares as on the Cut-off date may contact the RTA to obtain the login details if they desire to avail remote e-voting facility.

If the Member is already registered with CDSL for remote E-voting purpose, then the existing user ID and password can be used for casting the vote. Shareholders can also cast their votes using m-Voting, CDSL's mobile app available for Android / Apple / Windows Phones, upon downloading the same in their mobiles.

The remote e-voting period commences on Friday, 2nd August 2019 at 9.00 AM and will end on Sunday, the 4th August 2019 at 5.00 PM during which period the Members can cast their vote electronically. The remote E-voting module shall be disabled by CDSL and will not be available thereafter. Members who did not avail remote E-voting facility will be provided an opportunity to vote at the meeting by polling paper. Members who have exercised remote e-voting are entitled to attend the meeting but shall not be permitted to vote. However in case a Member has cast his vote electronically as well as through the polling paper, the vote cast through remote E-voting alone shall be considered.

The results of voting including remote E-voting will be declared as stipulated under the relevant Rules and will also be posted on the Company's Website and the website of CDSL. For any queries or issues regarding remote e-voting, please refer to the Frequently Asked Questions ("FAQs") and E-voting manual available at **www.evotingindia.com** under help section or write an email to **helpdesk.evoting@cdslindia.com**. In case of any queries / grievances relating to E-voting, Members may contact Mr.Mehboob (022-23058543) or Mr. Rakesh Dalvi (022-23058542), Central Depository Services (India) Limited (CDSL) 25th Floor, Marathon Futurex, N M Joshi Marg, Lower Parel (East), Mumbai – 400 013. Helpdesk: 1800225533 E-mail: helpdesk.evoting@cdslindia.com or the RTA or the undersigned by e-mail/post/courier.

**By Order of the Board**
**For Tamilnadu Petroproducts Limited**

Place : Chennai
Date : 13.07.2019

K. Priya
*Company Secretary*

# தமிழ்நாடு பெட்ரோப்ராடக்ட்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: மணலி எக்ஸ்பிரஸ் ஹைவே, மணலி,
சென்னை-600 068.
நிபஎ: L23200TN1984PLC010931
வலைதளம்: www.tnpetro.com மின்னஞ்சல்: secy-legal@tnpetro.com
தொலைபேசி & நகல் எண்: 044-25945588

## அறிவிப்பு

**ஆண்டு பேரவைக் கூட்டமும் அதன் ஆண்டறிக்கையும்**

நிறுவனத்தின் 34வது ஆண்டு பேரவைக் கூட்டம் திங்கட்கிழமை, ஆகஸ்ட் 05, 2019, மாலை 03.00 மணிக்கு ராஜா அண்ணாமலை மன்றம், 5, எஸ்பிளனேடு சாலை (உயர்நீதி மன்றம் அருகில்), சென்னை – 600 108 என்ற முகவரியில் நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது. இக்கூட்டத்தில், அறிவிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள சாதாரண மற்றும் சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

2018-19-ம் நிதி ஆண்டிற்கான ஆண்டறிக்கை மற்றும் பேரவைக் கூட்ட அறிவிக்கை உறுப்பினர்களுக்கு அவர்தம் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு மின்னணு வடிவில் 09.07.2019 அன்றும், ஏனைய உறுப்பினர்களுக்கு அறிவிக்கையும், சுருக்கமான நிதிநிலை விபரங்களும் அவர்தம் முகவரிக்கு 12.07.2019 அன்றும் அனுப்பப்பட்டுள்ளன.

கூட்ட அறிவிக்கையும் முழுமையான ஆண்டறிக்கையும் நிறுவனத்தின் வலைதளத்தில் உள்ளன. இவை கிடைக்கப் பெறாத உறுப்பினர்கள் மேற்படி வலைதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் அல்லது நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர் கேமியோ கார்பரேட் சர்வீசஸ் லிமிடெட் (கேமியோ), சுப்ரமணியன் பில்டிங், 1, கிளப் ஹவுஸ் சாலை, சென்னை – 600 002 (மின்னஞ்சல்: investor@cameoindia.com) என்ற முகவரிக்கு வேண்டுகோள் அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

பேரவைக்கூட்டத்தில் பங்கேற்று வாக்களிக்கும் உரிமை உடைய உறுப்பினர்கள் தங்களுக்குப் பதிலாக மற்றொருவரை (பதிலி) கூட்டத்தில் கலந்து கொண்டு வாக்களிக்க நியமிக்கலாம். பதிலியாக இருக்கும் நபர் நிறுவனத்தின் உறுப்பினராக இருக்க வேண்டிய அவசியமில்லை. பதிலிப்படிவங்கள் நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தில் கூட்டம் தொடங்குவதற்கு 48 மணி நேரம் முன்பாக ஒப்படைக்கப்படவேண்டும்.

**பங்கு பரிமாற்ற பதிவேடு முடக்கம்**

நிறுவன உறுப்பினர் பதிவேடு மற்றும் பங்கு மாற்ற புத்தகம் 01-08-2019 முதல் 05-08-2019 வரை (இவ்விரு நாட்கள் உள்பட) முடக்கி வைக்கப்பட்டிருக்கும் என கம்பெனிச் சட்டம் 2013, பிரிவு 91-ன்படி இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

**2018-19 ஆண்டிற்கான ஈவுத்தொகை பட்டுவாடா**

ஜூலை 31, 2019 அன்று வர்த்தக முடிவு நேரத்தில் உள்ள பயனாளிகள் பட்டியல்களில் பெயர் இருக்கும் மின்னணு பங்குதாரர்களுக்கும் ஆகஸ்ட் 05, 2019 அன்று உறுப்பினர் பதிவேட்டில் உள்ள ஏனைய பங்குதாரர்களுக்கும் இயக்குநர் குழு பரிந்துரைத்த ஈவுத்தொகை பேரவையின் ஒப்புதலுக்குப் பிறகு ஆகஸ்ட் 30, 2019 அன்று பட்டுவாடா செய்யப்படும்.

**மின்னணு வாக்களிப்பு**

கம்பெனிச் சட்டப் பிரிவு 108 மற்றும் அதன் கீழான விதிமுறைகள் மற்றும் செபி (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்பாட்டுத் தேவைகள்) கட்டுப்பாடுகள் 2015ன் 44ம் கூற்றின்படி உறுப்பினர்கள் பேரவைக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மீது தொலை மின்னணு வாக்குப் பதிவு செய்திட சென்ட்ரல் டெபாசிடரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் (CDSL) நிறுவனத்துடன் ஓர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி தொலை மின்னணு வாக்குப் பதிவு செய்வதற்கான முறைகள் கூட்ட அறிவிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன. ஜூலை 29, 2019 (தகுதி நாள்) அன்று நிறுவனத்தின் உறுப்பினர்களாக உள்ளவர்கள் மட்டுமே தொலை மின்னணு அல்லது பேரவைக்கூட்ட இடத்தில் வாக்கெடுப்பில் பங்கு கொள்ளலாம். கூட்ட அறிவிக்கை CDSL மற்றும் பங்கு சந்தைகளின் வலைதளங்களான www.cdslindia.com, www.bseindia.com மற்றும் www.nseindia.comலும் பதிவேற்றப்பட்டுள்ளது.

ஆண்டறிக்கைகள் அனுப்பி வைக்கப்பட்டபின் தகுதி நாளுக்கு முன் உறுப்பினரான நபர்கள் ஆண்டறிக்கையை இணையதளத்தின் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் அல்லது கேமியோவை தொடர்பு கொள்ளலாம். மேற்படி நபர்கள் தொலைதூர மின்னணு வாக்களிக்க விரும்பினால், புகுபதிகை விவரங்களை கேமியோவிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

உறுப்பினர்கள் CDSL-ல் முன்னரே மின்னணு வாக்களிக்க பதிவு செய்திருந்தால் அதே புகுபதிகை விவரங்களைக் கொண்டு வாக்களிக்கலாம். உறுப்பினர்கள் CDSL-ல்ன் m-voting செயலியை தங்கள் கைபேசியில் பதிவிறக்கம் செய்து கைபேசி மூலம் வாக்களிக்கலாம்.

ஆகஸ்ட் 02, 2019 காலை 9.00 மணி முதல் ஆகஸ்ட் 04, 2019 மாலை 5.00 மணி (இந்திய நேரப்படி) முடிய மின்னணு வாக்குப் பதிவு செய்யலாம். இதன் பிறகு மின்னணு வாக்குப் பதிவு செய்திடும் வசதி இருக்காது. தொலைதூர மின்னணு வாக்களிக்காத உறுப்பினர்கள் கூட்ட இடத்தில் வாக்கு சீட்டு மூலம் வாக்களிக்கலாம். மின்னணு முறையில் வாக்களித்தவர்கள் பேரவைக்கூட்டத்தில் பங்கு கொள்ளலாம். ஆனால் வாக்களிக்க முடியாது. மீறி வாக்களித்தால் மின்னணு முறையில் பதிவான வாக்குகளே கணக்கிற் கொள்ளப்படும்.

வாக்கு முடிவுகள் விதிகளில் குறிப்பிட்டவாறு அறிவிக்கப்படும் மற்றும் நிறுவன இணையதளத்தில் மற்றும் www.cdslindia.comல் வெளியிடப்படும். மின்னணு வாக்குப் பதிவின் மீதான சந்தேக விளக்கம் பெற உறுப்பினர்கள் CDSL-ன் இணைய தளத்தில் **(www.evotingindia.com)** உள்ள கையேட்டையோ, சந்தேக விளக்க வினா-விடைகளையோ பார்க்கலாம் அல்லது **helpdesk.evoting@cdslindia.com** என்ற முகவரிக்கு மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளலாம். இவ்வகையில், வேறு ஏதேனும் சிரமங்கள் இருந்தால், உறுப்பினர்கள் திரு.மெஹ்பூப் (022-23058543) அல்லது திரு.ராகேஷ் தால்வி (022-23058542), CDSL, 25வது மாடி, மாரத்தான் ஃப்யூச்சரக்ஸ், N M ஜோஷி மார்க், லோயர் பரேல் (கிழக்கு), மும்பை - 400 013 உதவிமையம்: 1800225533 மின்னஞ்சல்: **helpdesk: evoting@cdslindia.com** அல்லது கேமியோ நிறுவனத்தையோ அல்லது கீழ்காணும் நபரையோ தொடர்பு கொள்ளலாம்.

**இயக்குனர் குழு ஆணைப்படி**
**தமிழ்நாடு பெட்ரோப்ராடக்ட்ஸ் லிமிடெட்டிற்காக**

இடம் : சென்னை
தேதி : 13.07.2019

K. பிரியா
நிறுவனச் செயலர்